**Bildungsdirektion Kanton Zürich**
Volksschulamt

Tamilisch

# சூரிச் மாநிலத்திலுள்ள (கன்ரோன்) ஆரம்பப் பாடசாலை

# பெற்றோருக்கான தகவல்கள்

# சூரிச் மாநிலத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை

-------

## இலட்சியமும் எதிர்பார்ப்புக்களும்

சூரிச் மாநிலத்திலுள்ள (கன்ரோன்) அரசாங்கப் பாடசாலை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் ஒழுங்கு முறைக்கு கட்டுப்பட கடமைப்பட்டிருக்கிறது. இது சமயத்திற்கும் அரசியலுக்கும் நடுநிலையானது. அரசாங்க ஆரம்பப் பாடசாலைக்குப் போவது இலவசமானது.

ஆரம்பப் பாடசாலை ஒரு நன்நடத்தையை சொல்லிக் கொடுக்கும், அதாவது அன்பான, மனிதத்தன்மையுள்ள அதோடு குடியரசின் முக்கியத்துவத்தையும் தெரிய வைக்கிறது. அது பெண்பிள்ளைகளையும் ஆண்பிள்ளைகளையும் ஒரேமாதிரி ஊக்குவிக்கும். அது குடும்பத்தின் வளர்ப்பு முறையை நிறைவுசெய்கிறது.

ஆரம்பப் பாடசாலை அடிப்படை அறிவையும் திறமையையும் கொடுக்கும்; அது தொடர்புகளை கண்டுபிடிக்க வழிகாட்டும். அது மற்றவர்களுக்கும் சுற்றுப்புறத்திற்கும் மரியாதை கொடுக்க உதவுவதோடு பிள்ளைகளின் முழுமையான முன்னேற்றத்தை தன்னிச்சையாகவும் அதோடு மற்றவர்களோடு சேர்ந்து வேலைசெய்யும் திறமையையும் உருவாக்கும். சூரிச் மாநிலத்தில் வசிக்கின்ற எல்லாப் பிள்ளைகளுக்கும் அரசாங்கப் பாடசாலைக்குப் போவதற்கு உரிமை இருக்கிறது. கட்டாயக் கல்வி ஒன்பது வருடங்கள் (2008/09 இலிருந்து: பதினொரு வருடங்கள்), எப்படியாயினும் ஆரம்பப் பாடசாலை முடியும் வரைக்கும் இருக்கும். நீங்கள் இதை தனிப்பட்ட வகுப்புக்கள் அல்லது தனிப்பட்ட பாடசாலைகளிலும் செய்து முடிக்கலாம்.

## கட்டாயக் கல்வியின் ஆரம்பம்

பிள்ளைகளுக்கு 30ம் திகதி சித்திரைக்குள் நாலு வயது முடிந்துவிட்டால், அடுத்த பாடசாலை வருடம் ஆரம்பிக்கும் பொழுது கட்டாயப் பாடசாலைக்குப் போக வேண்டும், மேலும் கின்டர் காடனுக்குப் போகலாம். பாடசாலை நிர்வாகம் எந்தப் பிள்ளைக்கு எந்தப் பாடசாலை என்று பிரிக்கும்.

## பாடசாலை வருடம்

பாடசாலை வருடம் ஆவணி மாதம் நடுப்பகுதியில் இருந்து தொடங்கி அடுத்த வருடம் ஆடி மாதம் தொடக்கம் வரையும் நீடிக்கும். வகுப்புக்கள் இலையுதிர்காலம்-, கிறிஸ்மஸ்-, விளையாட்டு (பொழுது போக்கு)-, வசந்தகாலம்- அதோடு கோடைகால விடுமுறைகளில் இடைநிறுத்தப்படும். வகுப்புகள் 39 கிழமைகள் இருக்கும்.

## ஒரு பாடசாலை நாள்

**வகுப்புகள் அல்லது பிள்ளைகளைக் கவனித்துப் பாத்துக் கொள்வது காலையில் 8 மணி தொடக்கம் 12 மணி வரையும் இருக்கும். ஒழுங்கமைப்பின் காரணமாக ஒரு இருபது நிமிடங்கள் வித்தியாசப்பட சாத்தியமுண்டு. (உதாரணமாக 08.20 மணிக்கு பாடசாலை ஆரம்பமாகும்). மத்தியானத்திற்குப் பின்பு பிள்ளைகளுக்கு தனிப்பட்ட நேர அட்டவணை இருக்கும். பெற்றோருக்கு அவர்களினுடைய பிள்ளைகளை நாள் முழுவதும் பார்த்துக்கொள்ள விடுவதற்கு உரிமை இருக்கிறது. இந்த சலுகைகளுக்கு காசு கட்ட வேண்டும்.**

## கின்டர் காடனிலிருந்து ஆரம்பப் பாடசாலையின் ஊடாக செக்குண்டார் வகுப்பிற்குப் போவது



## கின்டர் காடன் இரண்டு வருட காலம் இருக்கும்

**கின்டர் காடன் குடும்பத்தின் வளர்ப்பு முறைக்கு உதவுவதோடு அதை மேலும் விருத்தி செய்யும். அது சின்னப் பிள்ளைகளுக்குத்தக்க ஒரு காரியத்தை செய்வதற்கு போதுமான ஆற்றலையும், தேர்ச்சியையும் அதோடு விஷேஷ திறமைகளையும் ஊக்குவிக்கும், மேலும் பிள்ளைகளை நிறைய ஆட்கள் இருக்கும் கூட்டத்தில் சந்தோஷமாக (நன்றாக) இருக்கும் வகையிலும் கவனமாக வழிநடத்தும். அது பாடசாலையின் தேவைகளுக்கு தயார்ப்படுத்துகிறது.**

## ஆரம்பப் பாடசாலை ஆறு வருட காலம் இருக்கும்.

**ஆறு வயதான பிள்ளைகளை ஆறு வருஷ ஆரம்பப் பாடசாலைக்கு எடுப்பார்கள். எல்லாப் பிள்ளைகளும் ஆரம்பப் பாடசாலையில் பாடத்தை சேர்ந்து படிப்பார்கள், அது அவர்களின் பிறப்பிடம், அவர்களினுடைய பால், அவர்களினுடைய பாடசாலைத் திறமைகளில் தங்கியிருக்கவில்லை. மூன்று வருடங்களின் பின் வழக்கமாக வகுப்பிற்குப் பொறுப்பான ஆசிரியரும் அனேகமாக வகுப்பில் ஒன்றாகச் சேர்ந்து இருப்பவர்களும் மாறுவார்கள். ஆரம்பப் பாடசாலை வாசிக்கவும், எழுதவும், கணக்கிடவும் தேவையான அடிப்படை அறிவைக் கொடுக்கும், அதாவது கணிதம், டொச், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பாஷைகளுக்கும். எழுதும் முறை, கைவேலை, படம் வரைதலும் சங்கீதமும், விளையாட்டு, மனிதரும் சுற்றாடலும் போன்றவை மேலும் உள்ள முக்கியமான பாடங்களாகும்.**

**வருடத்திற்கு இரண்டு தரம் பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை அறிக்கை (ரிப்போட்) கிடைக்கும், அதில் அவர்களினுடைய படிப்பின் பெறுபேறுகள், அவர்களினுடைய வேலைசெய்யும் - அதோடு படிக்கும் முறை மேலும் அவர்கள் மற்றவர்களுடன் நடந்து கொள்ளும் முறை போன்றவை காட்டப்படும்.**

**பிள்ளைகள், அவர்களினுடைய புரிந்துகொள்ளும் சக்திக்கு (அறிவுக்கு) அல்லது தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு தேவைப்பட்டால், விஷேஷ நடவடிக்கைகள் மூலம் உதவி கிடைக்கும், அது பெற்றேருடன் சேர்ந்து தீர்மானிக்கப்படும்.**

**ஆரம்பப் பாடசாலை முடிவில் பிள்ளைகள் அவர்களினுடைய திறமையைப் பொறுத்து செக்குண்டார் வகுப்பிலுள்ள இரண்டு அல்லது மூன்று பிரிவுகளில் ஒன்றிற்கு பிரிக்கப்படுவார்கள். படிப்பில் மிகவும் விஷேஷ பலன்களைப் பெற்ற பிள்ளைகள் கிம்நாசியத்திற்கு விண்ணப்பம் செய்யலாம் மேலும் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அங்கே போவார்கள். அத்துடன் அவர்கள் ஆரம்பப் பாடசாலையை விட்டுவிட்டு அவர்களினுடைய கட்டாயக் கல்வியின் கடைசி மூன்று வருடங்களையும் கிம்நாசியத்தில் நிறைவு செய்வார்கள்.**

## மூன்று வருடம் செக்குண்டார் வகுப்பு பிள்ளைகளின் திறமைகளின் பலத்தையும் (கூட) மேலும் பலவீனத்தையும் (குறைய) பொறுத்து பிரிவுகளாக அமைக்கப்படும்

**செக்குண்டார் வகுப்பில் ஆரம்பப் பாடசாலையில் பெற்ற அறிவை பலப்படுத்துவதோடு கூட்டப்படும். ஆரம்பப் பாடசாலையில் இருந்த பாடங்களோடு இனி உயிரியல், பௌதீகம், மனையியல் போன்றவை மேலதிகமாக இருக்கும். செக்குண்டார் வகுப்பு வேலைக்கான பயிற்சிக்கு அல்லது தொடர்ந்து படிப்பதற்கு தயார்ப்படுத்தும். அதனால் இளைஞர்களை சரியான முறையில் முன்னேற்றுவதற்காக செக்குண்டார் வகுப்பு ஒவ்வொரு நகரசபையைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்படும். பிரிவு A திறமை கூடிய (கஷ்டமான) பிரிவு, பிரிவு B கொஞ்சம் திறமை குறைவானவர்களையும், பிரிவு C ஆகத் திறமை குறைவான மாணவிகளையும் மாணவர்களையும் எடுக்கும். நகரசபைகள் சில பாடங்களுக்கு வித்தியாசமான மட்டங்களை அமைக்கலாம். I வது மட்டம் கூடிய எதிர்பார்ப்புக்களையும் (கஷ்டமாகவும்), III வது மட்டம் மிகக் குறைவாகவும் எதிர்பார்க்கிறது. செக்குண்டார் வகுப்பு முடிந்தவுடன் மாணவர்களின் கட்டாயக் கல்வி முடிவடைகிறது. அதிகமானவர்கள் ஒரு வேலைக்கான பயிற்சியுடன் தொழில் துறைக்குக் கற்பிக்கும் கல்லூரியிலும் (Berufsfachschule) படித்து முடிப்பார்கள், அல்லது அவர்கள் நடுநிலைப் பாடசாலை (Mittelschule) அல்லது வேலைக்கான பயிற்சியுடன் தொழில் துறையில் விஷேஷ தேர்ச்சிக்கு கற்பிக்கும் கல்லூரிக்குப் (Berufmittelschule) போவதோடு ஒரு மத்தூர் சோதனை செய்வார்கள், அது அவர்களுக்கு ஒரு உயர் கல்வி கற்கும் கல்லூரியில் (Fachhochschule) அல்லது பல்கலைக்கழகத்தில் (Hochschule) படிப்பதற்கான தகுதியைக் கொடுக்கிறது.**

## அரசாங்க ஆரம்பப் பாடசாலையும் அதன் வேலையும்

**பாடசாலை அமைந்திருக்கும் இடம்**

**பிள்ளைகள் அவர்கள் வசிக்கும் இடத்திலேயே ஆரம்பப் பாடசாலைக்குப் போவார்கள். அவர்கள் கிழமை நாட்களில் பொதுவாக அவர்களினுடைய வசிப்பிடத்தை விட்டு வெளியே தங்கினால், அந்த இடத்திலுள்ள பாடசாலைக்குப் போகலாம். குறிப்பிட்ட இடத்திற்குரிய பாடசாலைப் பொறுப்பாளர் பிள்ளைகளை பாடசாலைகளுக்குப் பிரித்து விடுவார்கள். வகுப்புக்களுக்கும் பிரிவுகளுக்கும் பிரிப்பது பாடசாலை நிர்வாகம் தீர்மானிக்கும்.**

## வகுப்பு (பாட) நேரங்களும் (நிலையான நேரம்) அதோடு ஒரு நாளை அமைத்தலும்

**வகுப்பு நேரங்கள் - அல்லது பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும் நேரங்கள் காலையில் 8 மணி தொடக்கம் 12 மணி வரையும் இருக்கும். ஒழுங்கமைப்பின் காரணமாக பாடசாலைப் பொறுப்பாளர் இந்த நேரத்தை ஆகக் கூடியது 20 நிமிடங்கள் குறைக்கலாம். மதிய போசன வேளையும் மத்தியானத்திற்குப் பின்பு வகுப்புக்களும் நகரசபைகள் திட்டமிடும்.**

**மதிய போசன வேளை பாடசாலையிலிருந்து வீட்டிற்குப் போய் திரும்பி பாடசாலைக்கு வருவதற்கு போதுமானதாக இருக்க வேண்டும், அதோடு உணவை உட்கொள்வதற்கும். ஒரு நாள் திட்டத்தின் தேவைக்கேற்ப நகரசபைகள் (மதிய போசனம் செய்யும் இடம் (Mittagstisch), பகலில் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும் குடும்பங்கள் (Tagesfamilien), மாணவர்களைக் கவனித்துக் கொள்ளும் இடம் (Schülerhort), முழுநேரப் பாடசாலை (Tagesschule), போன்றவற்றை) ஏற்பாடு செய்வார்கள்.**

**மேலதிகமான சலுகைகள்**
**தானாகவே விருப்பப்பட்டு செய்யும் மேலதிக சலுகைகள் ஆவன சங்கீதம் பயிலுதலும் தாய்ப்பாஷைக்கும் கலாச்சாரத்திற்குமான வகுப்பும் (HSK)**

**உதவி புரியும் வேலைகள்**
**அதில் பாடசாலை மருத்துவ சேவை, பல் வியாதியிலிருந்து காப்பாற்றுவது, பாடசாலை மனோதத்துவ சேவை அதோடு பாடசாலை பொது நல வேலை போன்றவை அடங்கும். எல்லாப் பிள்ளைகளையும் வைத்தியரும், பல்வைத்தியரும் சோதிப்பார்கள்.**

**சேர்ந்து ஒத்துழைப்பதும் ஒருவருக்கொருவர் உதவுவதும்**
**மாணவிகளினுடையதும் மாணவர்களினுடையதும் கல்வியும் வளர்ப்பும் ஆரம்பப் பாடசாலையினதும் பெற்றோரினதும் பொதுவான குறிக்கோள். பிள்ளைகள் படிப்பில் நல்ல பலனை அடைவதற்கு ஒரு முக்கியமான நிபந்தனை பாடசாலை - பெற்றோர் - மாணவிகள்/மாணவர்கள் மூவரும் நன்றாக சேர்ந்து ஒத்துழைப்பது.**

**பாடசாலை ஒழுங்காக பெற்றேருக்கு அவர்களினுடைய பிள்ளைகளின் ஒழுக்கத்தையும் பெறுபேறுகளையும் தெரியப்படுத்தும். விஷேஷ சம்பவங்களில் பாடசாலைப் பொறுப்பாளர் அல்லது பாடசாலை நிர்வாகம் பெற்றோர்கள் பங்கெடுக்கும் சில நிகழ்ச்சிகளில் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டுமென்று அறிவிக்கும். பாடசாலை வகுப்பின் பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பு, பெற்றோருக்கான கல்வி, பாடசாலை வாரத்திட்டம், பாடசாலையில் போய்ப் பார்வையிடும் நாட்கள், இடைவேளையில் இருக்கும் இடத்தை வடிவமைப்பது, போன்றவற்றில் பெற்றோர்கள் பங்கெடுப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. இப்படியான "பொதுவான பங்கெடுப்புகளுக்கு" பெற்றோர்கள் அழைக்கப்படுவார்கள், ஆனால் கட்டாயப்படுத்தக் கூடாது. பெற்றோருக்கு பாடசாலையில் ஒருவரை தீர்மானிப்பதிலும் கற்பிக்கும் முறையிலும் பங்கெடுக்கின்ற உரிமை இல்லை.**

**பெற்றோர்கள் அவர்களினுடைய பிள்ளைகளின் வளர்ப்பிற்கும் அதேநேரம் அவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதற்கும் அதோடு கட்டாயக் கல்வியை பூர்த்தி செய்வதற்கும் பொறுப்பு. பாடசாலைக்கு முக்கியமென்றால் அவர்கள் ஆசிரியர்களுக்கு அல்லது பாடசாலை நிர்வாகத்திற்கு அவர்களினுடைய பிள்ளையின் ஒழுக்கத்தைப்**

**பற்றியும் மேலும் அதைச் சுற்றி நடந்த சம்பவங்களைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். அவர்கள் முக்கியமான தீர்மானங்களில், விஷேஷமாக பாடசாலை வாழ்க்கைப் பாதையின் முடிவுகளில், அவர்களினுடைய பிள்ளை தனிப்பட்ட முறையில் சம்மந்தப்பட்டிருந்தால் பங்குபற்ற வேண்டும்.**

**மாணவிகளும் மாணவர்களும்** **அவர்களினுடைய கடமையை நிறைவேற்ற வேண்டும், அதோடு பாடசாலை செயல்ப்பாடுகளில் சுறுசுறுப்பாக பங்குபற்ற வேண்டும். அவர்களைப்பற்றிய தீர்மானங்களில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளுவார்கள், அவர்களினுடைய வயது அல்லது வேறு முக்கிய காரணம் அதற்கு தடையாக இல்லாத வரையிலும். ஆரம்பப் பாடசாலைக்கு மாணவிகளினுடையதும் மாணவர்களினுடையதும் வயதிற்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்ற பொறுப்பும் அபிப்பிராயமும் தெரியும்.**

**பிரச்சனைகளின்போது என்ன செய்யலாம்?**

**ஆசிரியர்களும் பெற்றோரும் உடனடியாக ஒருவருக்கொருவர் அறிவிக்க வேண்டும். பெற்றோருக்கு அவர்களினுடைய பிள்ளையின் வகுப்பு ஆசிரியை அல்லது வகுப்பு ஆசிரியர் தான் முதலாவதாகத் தொடர்பு கொள்ளக்கூடிய ஆள். ஆசிரியருடன் பேசுவதன் மூலம் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாவிட்டால், பெற்றோர் பாடசாலை நிர்வாகத்தை கலந்தாலோசிக்கலாம். இந்த சந்திப்பும் பயன் அளிக்காவிடில் பெற்றோர் அந்த இடத்திற்குரிய பாடசாலை அதிகார சபை, பாடசாலைப் பொறுப்பாளரை தொடர்பு கொள்ள வேண்டும்.**

**யார் உங்களுக்கு தகவல்கள் கொடுப்பார்கள்?**

**நீங்கள் உங்களுடைய பிள்ளையின் ஆசிரியரை அணுகவும், அவரைத்தான் உங்களால் தொடர்பு கொள்ள முடியும். அல்லது பாடசாலை தலைமை ஆசிரியை அல்லது தலைமை ஆசிரியர். நீங்கள் வசிக்கும் இடத்தில் இருக்கும் நகரசபையில் உள்ள ஆட்சி உங்களுக்கு எல்லா முக்கியமான தகவல்கள் கொடுக்கும் இடங்களின் விபரங்களையும் அதோடு பாடசாலை வைத்தியர் அல்லது பாடசாலை பொறுப்பாளர் (பராமரிப்பு) போன்ற உதவிகளையும் அளிக்கும். நகரசபைகளிலுள்ள பாடசாலை விவகாரங்களைக் கவனிக்கும் பிரிவு இப்போ இன்டர்நெற் இல் ஒரு பக்கத்தை (வெப்சைற்) வைத்திருக்கிறது. தயவுசெய்து நீங்கள் நேரம் எடுத்து இன்டர்நெற்றில் "உங்களுடைய" பாடசாலையைப் பற்றி செய்திருப்பதை ஒருதடவை பார்க்கவும்!**

**வேறு தகவல்கள் கிடைக்கும் மார்க்கம்**

**முழுமையான தகவல்களை கல்வி நிர்வாகசபை மேலும் ஆரம்பப் பாடசாலை கல்வி அலுவலகம் இன்டர்நெற்றில் செய்திருப்பதில் காணலாம்:**

- **www.bildungsdirektion.zh.ch**
- **www.volksschulamt.zh.ch**

**ஆரம்பப் பாடசாலை கல்வி அலுவலகத்தின் பிரதான பக்கத்தில் (ஹோம்பேஜ்) முக்கியமான தகவல் கொடுக்கும் காரியாலயங்களின் தொலைபேசி இலக்கங்களைக் காணலாம்.**

Bildungsdirektion
Volksschulamt
Walchestrasse 21
8090 Zürich
Tel. 043 259 22 51